




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 54

## நாட்டில் அவசர கால சட்டம் பிரகடனம்

**நேற்று நள்ளிரவு முதல் நாடு முழுவதும் அமுலாகும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அவசர கால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் நலனை பாதுகாப்பதற்கும், மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பேணுவதற்கும் அரசியலமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**





## க.பொ.த உயர் தர மாணவர்களுக்கான அறிவித்தல்

*நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சி (சிங்கள/தமிழ்) நடைமுறைப் பரீட்சைகளில் நேற்று (06) தோற்ற முடியாமல் போன க.பொ.த (உ/த) பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.*

*பரீட்சார்த்திகள் உரிய பரீட்சை நிலையங்களுக்குச் சென்று தங்களின் நடைமுறைப் பரீட்சைகளுக்கான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.*

## மீண்டும் பதவி விலகிய ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய



*நேற்றைய தினம் பாராளுமன்ற பிரதி சபாநாயகராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பதவி விலக தீர்மானித்துள்ளார்.*

*தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கையளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து ராஜினாமா செய்திருந்திருந்தார். பின்னர், நேற்றைய தினம் பாராளுமன்றில் புதிய பிரதி சபாநாயகருக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றிருந்த நிலையில் அதில் 148 வாக்குகளை பெற்று மீண்டும் பிரதி சபாநாயகராக அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## ஜி.எச்.பீரிஸ் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நியமனம்

**பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று (06) பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

**1960 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியலில் முதல் தரப் பட்டம் பெற் ஜி.எச்.பீரிஸ் 1965 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதார புவி யியலில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றார்.**

**இவர் முதலில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு 44 வருடங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார். பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ் உலகின் பல்வேறு நாடுகளில் இடம்பெறும் அரசியல் மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்து நிபுணத்துவம் பெற்றவராவார்.**

## கவிஞர், டாக்டர் எஸ். நளிமுதீன் எழுதிய “அரசியல் அறம் ஏ.ஆர்.எம்” கவிதை நூல் வெளியீடு

(நூருல் ஹூதா உமர்)

டாக்டர் எஸ்.நளீமுடீன் எழுதிய “அரசியல் அறம் A.R.M” கவிதை நூல் வெளியீடும்ஏ.ஆர்.மன்சூர்பௌண்டேஷனின் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை (6) ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் ஏற்பாட்டில். அதன் ஸ்தாபகத் தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமுடீன் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித்துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நூல் ஆய்வுரை வழங்கியதுடன் அறிஞர் சித்திலெப்பை ஆய்வு மன்றத் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா மற்றும் இஸ்லாமிய ஆசிரியர் சங்க தலைவரும் எழுத்தாளருமான ஆசிரியர் ஜெஸ்மி எம். மூஸா. கவிதாயினி டாக்டர் புஸ்பலதா லோகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நூலின் முதற்பிரதியை மறைந்த முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களின் பாரியார் சுஹாரா மன்சூர் பெற்றுக்கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக். கல்முனை வடக்கு உப பிரதேச செயலாளர் டி.ஜெ அதிசயராஜ். சாய்ந்தமருது ஜும்மாப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள். அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள். கல்விமான்கள். புத்திஜீவிகள். கலை. இலக்கிய. ஊடக பிரமுகர்கள். முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட முன்னாள் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அஸீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர். முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களின் புதல்வருமான ரஹ்மத் மன்சூர் ஆகியோர் நவீன தொழினுட்பத்தின் வாயிலாக வாழ்த்து செய்தியை தெரிவித்தனர்.





## நான் விலகி செல்கிறேன் – ரணில்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பாராளுமன்றத்தில் தீர்வு காணப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க. “உண்மையில் மக்கள் இந்த முழு பாராளுமன்றத்தையும் சபிக்கின்றனர். இந்த நாளையும் வீணடித்து விட்டோம் என தெரிவிக்கின்றனர். நாம் சண்டையிடுகிறோம். அரசாங்கமும் எதிர்க்கட்சியும் சண்டையிடுகிறார்கள். எதிர்க்கட்சியும் எதிர்க்கட்சியும் சண்டையிடுகிறார்கள். நம்மை பார்த்துக் கொண்டுள்ளனர். எங்கும் டீசல் இல்லை. உணவு இல்லை. ஜூன் மாதம் நிலைமை எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. இந்த சபைக்கு இதனை தேடிக் கொடுக்க முடியுமா?.

இந்த காலத்தில் நாங்கள் எதுவும் செய்யவில்லை. ஒருவருக்கு ஒருவர் சேறு பூசினோம். அவதூறாக பேசினோம். இந்த சபையில் நாங்கள் அதைதான் செய்தோம். இதனை நாம் சரியாக பேசவில்லை என்றால் எதிர்காலத்தை பற்றி நினைக்கவேண்டாம். நேற்று அம்பாறையில் என்ன நடந்தது? பொலிஸில் எத்தனை பேருக்கு பிரச்சினை ஏற்பட்டது? இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை சுற்றிவளைத்தால் எங்கு செல்வது. நாட்டின் பிரச்சினையை தீர்ப்பதில்தான் இதற்கு தீர்வு உள்ளது. அதைதான் அரசாங்கத்திற்கு தெரிவித்தோம். தயவு செய்து இதற்கு தீர்வு காணவும். நாட்டு மக்கள் கூறுகின்றனர் ராஜபக்ஷக்களை செல்லுமாறு. நம்பிக்கையில்லா பிரேரணையில் நானும் இருக்கிறேன். எனது ஆதரவு தேவையில்லை என்றால் சொல்லுங்கள் நான் விலகி செல்கிறேன். எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. நாம் இங்கு வந்து கத்தி சண்டையிட்டு போவோமானால். மக்கள் எம்மை சுற்றிவளைப்பது நியாயமே.



## மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் வெளியான சுற்றறிக்கை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பணியகம் விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விநியோகத்தின் போது நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு அதிகபட்சமாக 5 லீற்றர் மண்ணெண்ணெய் மாத்திரமே விநியோகிக்கப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பீப்பாய்கள் மற்றும் கொள்கலன்களுக்கு எரிபொருளை வழங்க கூடாது என குறிப்பிட்டு இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு மேலதிகமாக இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி. மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் நுகர்வோருக்கு மண்ணெண்ணெய் வழங்கும் போது. கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செல்லுபடியாகும் கடிதத்திற்கு அமைய அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப மண்ணெண்ணெய் வழங்க முடியும்.

இல்லையெனில். இதற்கு பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து மண்ணெண்ணெய்யை பெற்றுக் கொள்ள முடியாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கி ஆர்ப்பாட்டம் வாபஸ்

பாராளுமன்றநுழைவுவீதியில்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டுவந்தபல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் தனது ஆர்ப்பாட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே இதனை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு முடிவெடுப்பதற்கு கால அவகாசம் வழங்கி இவ்வாறு ஆர்ப்பாட்டத்தைதற்காலிகமாகஇடைநிறுத்துவதாகஅவர்தெரிவித்துள்ளார். அடுத்த பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்குள் அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் என பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

## இம்ரான் கானின் சொத்துகளை ஆய்வு செய்ய ஷெரிப் தலைமையிலான அரசு முடிவு

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது நடந்த வாக்கெடுப்பின் முடிவில். இம்ரான் கான் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரிப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்றார். இந்நிலையில். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் சொத்துகள் மற்றும் வருவாய் பற்றி ஆய்வு செய்ய ஷெபாஸ் ஷெரிப் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

இதுதவிர. பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் மத்திய செயலகத்தில் ஊழியர்களாக பணியாற்றிய தாஹிர் இக்பால். முகமது நோமேன் அப்சல். முகமது அர்ஷத் மற்றும் முகமது ரபீக் ஆகியோரது வங்கி கணக்கு விபரங்களையும் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

இதனை தி நியூஸ் இன்டர்நேசனல் என்ற செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது. இதேபோன்று. பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி மற்றும் இம்ரான் கானின் சர்வதேச வங்கி கணக்கு உள்ளிட்ட விவரங்களை கேட்டு பெறுவதற்காக சர்வதேச நிதி அமைப்புகளுக்கு கடிதம் எழுதவும் அரசு முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் ஊழியர்கள் 4 பேரின் வங்கி கணக்குகளில் பெரிய அளவில் பணம் வரவு வைக்கப்பட்டு உள்ளது. இதுபற்றி சான்றுகள் கிடைக்க பெற்றால் கைது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசு தெரிவித்து உள்ளது.

